

நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் உதகையில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நிறுவப்பட்டுள்ள அண்ணா சிலைக்கு ,அறிஞர் அண்ணாவின் 55வது நினைவு தினத்தை ஒட்டி சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் மரியாதை செலுத்தப்பட்டது. அப்போது எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறபாடுபட வேண்டும் என உறுதிமொழி எடுக்கப்பட்டது.இந்த நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பரமேஷ் குமார், நகரச் செயலாளர் ஜார்ஜ், மாவட்ட பொருளாளர் நாசர் உட்பட திமுகவினர் பங்கேற்று அண்ணா சிலைக்கு மரியாதை செலுத்தினர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 55ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சைதை மேற்குப் பகுதி 142அ வட்டத்தில் வட்ட கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம் ஏற்பாட்டில் சைதாப்பேட்டை மேற்கு ஜோன்ஸ் சாலையில் உள்ள சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும் பத்தாவது மண்டல குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில், நேற்று சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அண்ணாரின் திருவுருவ படத்திற்கு வண்ணமலர்மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தினார். உடன் ஆர்.ரமேஷ், வீடியோஎழில், கோவில்மணி, சேக்தாவூத், செல்வம், மற்றும் வட்டகழகத்தினர் கலந்துகொண்டனர்.

# காரைக்குடியில் ரூ.100 கோடியில் புதிதாக சட்டக் கல்லூரி கட்டிடப் பணிகள்!

## அமைச்சர் எஸ். ரகுபதி தலைமை! அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் - ப.சிதம்பரம் எம்.பி. தொடங்கி வைத்தனர்!

சிவகங்கை. பிப்.4-

தமிழக முதல்வராக தளபதி ஸ்டாலின் அவர்கள் 2021ல் பொறுப்பு ஏற்றதும் முதல் சட்டமன்ற கூட்டத் தொடரில் செட்டிநாட் டில் வேளாண் கல்லூரியும் காரைக்குடியில் சட்ட கல்லூரி துவங்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி கடந்த ஓராண்டுகளாக காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக வளாகத்தில் சட்டக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. வேளாண்கல்லூரி செட்டிநாட்டில் வருகிறது. புதிதாக சட்டக் கல்லூரிகட்டிடம் கட்டுவதற்கான கட்டு மான பணிகளுக்காக தமிழக முதல்வர் அவர்கள் ரூபாய் 100 கோடியே 45லட்சம் நிதியினை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார்.

அதற்கான கட்டிடப் பணிகள் துவக்க விழா நேற்று காரைக்குடி கழனி வாசல் சாலையில் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில்கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கார்த்தி ப.சிதம்பரம் எம். பி., சட்டமன்ற உறுப்பினர்கள்எஸ். மாங்குடி, திருமதி. தமிழரசி ரவிக்குமார், சட்டத்துறை செயலாளர் ஜான் அலெக்சாண்டர், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் சுகுமாறன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

முன்னதாக சட்டக் கல்லூரி இயக்குனர் முனைவர் ஜெயலட்சுமி வரவேற்று பேசினார். சட்டக்கல்லூரி முதல்வர் ராமகிருஷ்ணன் ரஞ்சித் நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், காரைக்குடி நகர்மன்ற தலைவர் எஸ்.முத்து துரை, ஒன்றிய கவுன்சிலர் தேவி மீனாள், சங்கராபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் தேவிமாங்குடி நகர் துணைத் தலைவர் என். குணசேகரன் பேரூராட்சி மன்ற தலைவர்கள் ராதிகா, முகமது மீரா, ஒன்றியச் செயலாளர்கள் சுப. சின்னத்துரை, குன்னக்குடி சுப்பிரமணியன், கே.எஸ். ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, மதார் சேட், துணைச் செயலாளர் முத்துக்குமார், ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் மனோகரன், இந்திய கம்யூனிஸ்ட் ராமச்சந்திரன்,உட்பட அனைத்து கட்சி பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள். 19.14 ஏக்கரில் ரூபாய் 100 கோடியே 45 லட்சம் மதிப்பில் புதிதாக மூன்று தளங்கள் கலையரங்கம் விடுதிகள் கொண்டதாக இந்த சட்டக் கல்லூரி அமைக்கப்பட உள்ளது. 18 மாதங்களில் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தலைமையில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பரப்புரைப் பயணம் !

## பிப்.12 முதல் 24ந் தேதி வரை நடைபெறுகிறது!

சென்னை, பிப். 4-

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், அனைத்துத் தமிழ் இயக்கங்களின் கூட்டமைப்பும் இணைந்து பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் தலைமையில் தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாப் பரப்புரையுடன் 32-ஆம் ஆண்டு ஊர்திப் பயணம் (இரத யாத்திரை) கன்னியாகுமரி முதல் சென்னை வரை 12.02.2024ந் தேதி தொடங்கி 24.02.2024 வரை நடைபெறுகிறது.

12.2.1993-ஆம் நாள் கன்னியாகுமரி சென்னை 50 நாட்கள் தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை வேண்டும். பயணம் 50 நாட்கள் நடந்தோம். தொடர்ந்து கடந்த 31 ஆண்டுகளாக நாம் நடத்தி வந்த 'தமிழ் நாட்டில் தமிழுக்கு முதன்மைப் பயணமும்,' கன்னியாகுமரி இமயம் - தில்லி தமிழ்ப் பரப்புரை தமிழர் உரிமைப் பாதுகாப்புப் பயணமும் கண்ணகி சிலையை மீண்டும் வைத்திடக் கண்ணகி சுடர்ப் பயணம் தமிழ்ச் சுடர் ஏந்தி ஓட்டப் பயணம், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்ற வேண்டுதல் பயணம் நிறைவடைந்த நிலையில், நம் தமிழ்ப் பயணம் இந்த ஆண்டும் தொடர்கிறது.

இந்த ஆண்டு, கலைஞர்; தமிழ்நாட்டிற்கு செய்த தொண்டறத்தை மக்கட்கு எடுத்துக் கூறிப்போற்றுதலோடு 32-ஆம் ஆண்டு தொடங்கும் இத்தமிழ்ப் பயணம்அடியில்குறிப்பிட்டவாறு தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிற்றூர், பேரூர்களில் வழித் தடத்தில் மக்களைச் சந்தித்து நம் தாய்த் தமிழ் மொழியை நம் தமிழ்நாட்டில் முதன்மைப்படுத்தும் கொள்கைகளை வலியுறுத்தும் தமிழூர்திப் பயணத்தை மேற்கொள்ள உள்ளோம். இவ்வாண்டுத் தொடர் பயணமும் எப்போதும் போல் நடைபெறுகிறது. நன்மக்கள் ஆதரவு தர வேண்டுகிறோம்.

### 32 – ஆம் ஆண்டு நிகழ்வுப் பயணம்

12.2.2024 - கன்னியாகுமரி காலை 9 மணி - வள்ளியூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, - தூத்துக்குடி தங்குதல்.

13.2.2024 - தூத்துக்குடி - எட்டயபுரம், கோயில் பட்டி, கழுகுமலை, சங்கரன்கோயில், முறம்பு பாவாணர் கோட்டம், இராச பாளையம் - இராச பாளையம் தங்குதல்.

14.2.2024 - இராசபாளையம் - திருவல்லிபுத்தூர், சிவகாசி, விருதுநகர், அருப்புக்கோட்டை, மதுரை - மதுரை தங்குதல்.

15.2.2024 - மதுரை - திருப்பத்தூர், திண்டுக்கல், கரூர் - கரூர் தங்குதல்.

16.2.2024 - கரூர் - ஈரோடு 100 கவிஞர்கள் கலைஞர் நூற்றாண்டு விழா - கரூர் தங்குதல்.

மேற்கண்டவாறு பரப்புரை பயணம் நடைபெறுகிறது.

## திருவொற்றியூர் தொகுதி தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா நினைவு நாள்! சிலைக்கு மாலை - புகழஞ்சலி!

## கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. செலுத்தினார்!

சென்னை, பிப். 4 -

திருவொற்றியூர் தொகுதி தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கழகத் தோழர்களுடன் அமைதிப் பேரணியாக சென்று திருவொற்றியூர் அஜாக்ஸ் ராயல் என்ஃபீல்ட் நிறுவனம் அருகில் அமைந்துள்ள அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாநில மீனவர் அணி துணைத் தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார்.

முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தாய் தமிழகத்திற்கு தமிழ்நாடு என பெயர் சூட்டிய தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு நாளை முன்னிட்டு திருவொற்றியூர் தொகுதி தி.மு.க. சார்பில் திருவொற்றியூர் அஜாக்ஸ் ராயல் என்பீல்ட் தொழிற்சாலை அருகில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாநில மீனவர் அணித் துணை தலைவர் திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் கழக தோழர்களுடன் அமைதி ஊர்வலமாகச் சென்று மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராமநாதன், 5வது வட்ட மாமன்ற உறுப்பினர் வட்டக் கழக செயலாளர் கே.பி.சொக்கலிங்கம் தலைமை கழக சொற்பொழிவாளர்கள் எழும்பூர். கோபிநாத், வாசு.கருணாநிதி, வட்ட கழக செயலாளர் ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், மாவட்ட கழகப் பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன், பி.எஸ்.சைலஸ் , குட்டி (எ) எத்திராஜ், பி.சந்தானகிருஷ்ணன், மாவட்ட அயலக அணி தலைவர் எஸ்.டி.சங்கர், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பா.பாலஉமாபதி பண்ணை சந்திரசேகர் கொசப்பூர் ரவிச்சந்திரன், 5 வது வட்ட துணைச் செயலாளர் ரமேஷ் தொ.மு.ச திட்டச் செயலாளர் கே.தேசிங்கு, மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் டி.மகேந்திரன்,

மேற்கு பகுதி மீனவரணி அமைப்பாளர் எஸ்.செல்வம், கிழக்கு பகுதி மீனவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.பிரகாஷ், எம்.எல். வேலன், கே.எஸ்.ஆனந்தன், எம்.எஸ்.பாண்டியன், சீனிவாசன், எம்.தயாநிதி, இளைஞரணி எம்.கே.எஸ். கார்த்திக் இரா.கணேசன், எஸ். விஜயராகவன், கொள்கை மணி, டி.இ. பரணி குமார், சோமசுந்தரம், இளங்கோ, தொ.மு.ச. ராஜவேல், ஜே.கருணாநிதி ராம்ராஜ், நா.அனில் குமார், ஒய்.தங்கவேல் ,

கார்கில் நகர் கஜா, 5வது வட்ட நிர்வாகிகள் அவைத் தலைவர் சார்லஸ், பாபு, விஜயலட்சுமி, வைகை சிவா, கஜேந்திரன், பாரூக், கோபி கிருஷ்ணா, செந்தில், சத்யா, வசந்த், சண்முகநாதன், தன்ராஜ், எல்லப்பன், ஜோதி, ரமேஷ் பீட்டர் கபடி குமார், பிரேம், போட்டோ செந்தில்,

தொ.மு.சா நிர்வாகிகள் இப்ராஹீம்பாய், லோகநாதன், சண்முகம், அன்புச் செல்வன், 14 அ வது வட்ட மகளிர் அணி ஹேமலதா, முன்னாள் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தமிழ் இன்பன் (ஏ) நிர்மல் தாஸ் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகளும் கழகத் தொண்டர்களும் கலந்து கொண்டு பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் புகழ் ஓங்குக என குரல் எழுப்பி மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.



பேரறிஞர் பெருந்தகை அறிவுலக மேதை அண்ணாவின் 55 வது நினைவு தினத்தை முன்னிட்டு, மாதவரம் வடக்கு பகுதி, 23 அ வட்டம் காவாங்கரையில் வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் தலைமையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில், அமைச்சர் செஞ்சி கே. எஸ். மஸ்தான் கலந்து கொண்டு, அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் மண்டல குழு தலைவர் எஸ். நந்தகோபால், 23 அ வட்டக் கழக நிர்வாகிகள் அ. ராமச்சந்திரன், மு. உசேன் மொய்தின், பி. சுதாகர், மு . அம்மு மூர்த்தி, அறிவழகன், பெ .முத்துகிருஷ்ணன், வி .ஹரி, து.பார்பன், ஜி. பார்த்திபன், அப்துல் சமது, 23 வது வட்ட நிர்வாகிகள் து.எழில்குமார், மு. விக்னேஸ்வரன், சொ. சரவணன், டி. நெல்சன் ராஜ், க. சிவகுமார், வே. ரவி, வினோத் ஜவகர், சேகர், தங்கவேல், தீபக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாநில அளவிலான ஆணழகன் போட்டி!

## எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ , நா.சந்திரபாபு, பி.எஸ்.சந்துரு பங்கேற்பு!

சென்னை, பிப்.4-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், இளைஞர் நலன் விளையாட்டுத்துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டத்துறை அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாபெரும் மாநில அளவிலான ஆணழகன் போட்டி, மாதவரம் 23வது வட்டத்தில் இன்று (4.2.2024) நடைபெறுகிறது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறும் இந்த ஆணழகன் போட்டி 23வது வட்டம் ஜே.கே. மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

23வது வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு வரவேற்கிறார்.

கே.அங்குசாமி, இ.கண்ணப்பன், கே.கருணாகரன், மாத்தூர் கா. தாமரைச் செல்வன், வி.ஆர்.குப்பன்

பகுதி நிர்வாகிகள் வி. திராவிட வீரன், க.சிவசங்கரன், ஆ.ராஜேந்திரன், எஸ். கௌரி, ஆர்.முரளி, பி. தரணி, க.காசிநாதன், பி.நிர்மல் குமார், கே.செல்வன், நா.மோகன் குமார், வி. கார்த்திகேயன், பி.சந்திரன், கே.ராஜா, நந்தினி சண்முகம்,

23வது வட்ட கழக நிர்வாகிகள் மு.விக்னேஸ்வரன், டி.ராஜாராம், மேக்ஷீலா உதயகுமார், சொ.சரவணன்,

டி.நெல்சன்ராஜ், க.சிவகுமார், க.ந.க.சைமன், வே. ரவி, எஸ்.முத்துவேல் ஆகியோர் முன்னிலை வைக்கிறார்கள்.

ஆணழகன் போட்டியை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு துவக்கி வைக்கிறார்.

அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி, கலாநிதி வீராசாமி எம்.பி, கே.பி. சங்கர் எம்.எல்.ஏ, தொகுதி பார்வையாளர் நா.சந்திரபாபு, ப.மதிவாணன், வி.இராமநாதன், வி.கண்ணதாசன், வி.கவி கணேசன் மற்றும்

குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், பி.அறிவழகி, எம்.ஆனந்தன், தி.மு.தனியரசு, ஜி.துக்காராம், ஏ.வி. ஆறுமுகம், எஸ்.நந்தகோபால், பெ.சரவணன், அருள்தாசன், கருணாகரன், தயாளன், ராஜேந்திரன், ஆர்.டி. மதன்குமார், எம்.எம்.செந்தில், எஸ்.ஏ.சீனிவாசன், வி. தியாகராஜன், எஸ்.கோமலவல்லி, அம்முமூர்த்தி, சன் முனியாண்டி, வெங்கடேசன், கோபால், சி.ஏழுமலை உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி இளைஞரணி, மாணவரணி நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பாகம் முகவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கிறார்கள்.

இறுதியாக வட்ட அவை தலைவர் து.எழில்குமார் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பை ஆர்.எம்.டி உடற்பயிற்சி கூட மேலாண்மை இயக்குனர் மோகன்ராஜ் செய்து வருகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. முனியாண்டி

**பிப்ரவரி 4 (2016)**



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

முகவை மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் – ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட அவைத் தலைவர் – திருப்பரங்குன்றம் ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தலைமைக் கழகப் பேச்சாளராக செயல்பட்டு, கழகக் கொள்கைகளை தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் பிரச்சாரப் பணியாற்றினார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**